பேரூராட்சி அலுவலகம்
முக்கூடல் – 627 601.

ந.க.எண். 788 / 2021 நாள். 17.03.2022

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்ட நிதியின் முக்கூடல் பேரூராட்சி சிங்கம்பாறை பகுதியில் நியாயவிலைக்கடை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணைகளின் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது அதனடிப்படையில் கீழ்காணும் விபரப்படியான பணிக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது. பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள் ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| **1.** | **ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய நாள்** | **:** | **17.03.2022-ம் தேதி முதல் 05.04.2022 பிற்பகல் 3.00 மணி வரை** |
| **2.** | **ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்** | **:** | **06.04.2022-ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை** |
| **3.** | **ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள்** | **:** | **06.04.2022 ம் தேதி பிற்பகல் 3.30 மணி** |

அட்டவணை

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | முக்கூடல் பேரூராட்சி சிங்கம்பாறை பகுதியில் நியாயவிலைக்கடை | 15.00 |
| | மொத்தம் | 15.00 |

## நிபந்தனைகள்

1. முக்கூடல் பேரூராட்சியில் 2020 - 21 ஆம் ஆண்டுக்கு ஒப்பந்தக்காரராக பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி அட்டவணை வழங்கப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வைப்புத் தொகை ரொக்கமாகச் செலுத்த ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளிகளோடு இணைத்தனுப்ப வேண்டும்.
3. வைப்புத் தொகை செலுத்தாதவர்களுடைய ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி எவ்வித காரணமும் காட்டாமலேயே ரத்து செய்ய செயல் அலுவலர் அவர்களுக்கு அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவருக்கு அதிகாரமுண்டு.
5. குறைந்த தொகைக்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளி பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்குட்பட்டது.

7. ஒப்பந்தப்புள்ளி தேதியை மாற்றவோ ஒத்திவைக்கவோ மறு ஒப்பந்தப்புள்ளி கோரவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

8. ஜாரியான ஒப்பந்தக்காரர் ரூ. 20/- மதிப்புள்ள முத்திரை காகிதத்தில் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்து உடனடியாக வேலையை ஆரம்பித்து குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செய்து முடிக்க வேண்டியது.

9. ஜாரியான ஒப்பந்தக்காரர் அப்போதைக்கப்போது பேரூராட்சி உதவிப் பொறியாளர் மற்றும் செயல் அலுவலர் அவர்களின் ஆலோசனைக்குட்பட்டு வேலையை நல்லமுறையில் திருப்திகரமாகவும் செய்து முடிக்க வேண்டும்.

10. மன்றத்தின் பரிசீலனை முடிந்த பின் ஜாரியாகாதவர்களுடைய வைப்புத் தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.

11. வேலை உத்திரவு கிடைக்கப் பெற்றவர்களுடைய வைப்புத் தொகை தணிக்கை முடிந்த பின் தணிக்கைத்தடை ஏதும் இல்லையெனில் திருப்பிக்கொடுக்கப்படும்.

12. வேலை முழுமையாக முடிக்கப்பெற்ற பின் இறுதி பில் மட்டும் தான் வழங்கப்படும் பகுதி பில் வழங்க இயலாது.

13. ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே உரிய கட்டணத்தை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி அட்டவணைப்படிவம் வாங்க வேண்டும்.

14. ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

15. ஒப்பந்தப்புள்ளி அட்டவணைகள் ஒப்பந்தகாரரிடம் மட்டுமே உரிய ஒப்புதல் பெற்று வழங்கப்படும். மாற்று நபரிடம் வழங்க இயலாது. வேலை நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
முக்கூடல் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

பெறுபவர் :

1. பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள் அனைவருக்கும்

நகல் :

1. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர் அவர்கள், பேரூராட்சிகள் துறை திருநெல்வேலி.
4. உதவிப் பொறியாளர், பேரூராட்சிகள் தொகுதி தலைமையகம், சேரன்மகாதேவி பேரூராட்சி.
5. செயல் அலுவலர், சேரன்மகாதேவி, வீரவநல்லூர், மேலச்செவல், பத்தமடை.
6. பேரூராட்சி அலுவலக அறிவிப்புப் பலகை.
7. சம்மந்தப்பட்ட கோப்புகள்.